2004 பிப்ரவரி 5]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 11, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

11–

போக்குவரத்துத் தொழிலாளர் நலன்

***19354–திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் சார்பில் சேலத்தில் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சேலத்தில் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் தொழிலாளர் நலன் கருதியும், பொது மக்களுடைய நலன் கருதியும் கேட்கப்பட்ட கேள்வி. சேலம், நாமக்கல், திருச்செங்கோடு, சங்ககிரி ஆகிய நகரங்களில் கனரக வாகனங்கள் அதிக அளவில் உள்ளன. இந்த கனரக வாகனங்களை ஓட்டுபவர்கள், ஓட்டுநர் பயிற்சி மட்டுமே எடுத்து, உரிமம் பெற்று வந்து ஓட்டுகின்றார்கள். வாகனங்களின் தொழில்நுட்பத்தை அறியாதவர்களாக உள்ளனர். இதனால், வாகனங்களில் சிறிது பழுது ஏற்பட்டாலும், வாகனங்களை நடு ரோட்டிலேயே நிறுத்திவிடுகிறார்கள். இதனால் சாலை விபத்துகள் ஏற்பட்டு, பெரிதும் இழப்பு ஏற்படுகின்றது. எனவே, தொழில்நுட்பத்தை அறிந்துகொள்ள, சேலம் மாவட்டத்தில் தொழில்நுட்பக் கல்லூரியை வரும் ஆண்டில் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையில் பணிபுரியும் பணியாளர்களின் குழந்தைகள் பொறியியல் பட்டப் படிப்புப் பயில

வாய்ப்பளிக்கும் வகையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் 1984-ல் ஈரோடு நகருக்கு அருகே சித்தோடு என்னும் இடத்திலே சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் சார்பாகப் பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்டது. அதிலே இப்போது 360 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அதிலே 50 சதவிகிதம், அதாவது 180 இடங்கள், போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கல்லூரியை நடத்துவதற்கு ஒரு போக்குவரத்துத் துறைப் பணியாளரிடமிருந்து மாதம் 10 ரூபாய் வீதம் 740 ரூபாய், வட்டியில்லாக் கடனாகப் பெற்று, அந்தப் பணத்தை முதலீடு செய்து, அதிலிருந்து வருகின்ற வட்டி வருமானத்திலே இந்தக் கல்லூரி நடந்து வருகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், இன்றைக்குக் கல்லூரி நடத்துவதற்கு அரசிடமிருந்து எந்த நிதியும் இதுவரை பெறப்படவில்லை. தற்போது இந்தக் கல்லூரியே நிதி நெருக்கடியில் நடந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், இப்படிப்பட்ட நிதி நெருக்கடியில் மேலும் ஒரு தொழில்நுட்பக் கல்லூரியைத் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிப் பருவத்திலே மாணவர்கள் சாலை விதிகளைக் கடைப்பிடிக்க, அறிந்து கொள்ள, மாணவர்களுக்கு பள்ளிப் பாடப் புத்தகத்தில் அவற்றைப் பாடமாகக் கொண்டுவர போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 12, திரு. கோ. இரவிராஜ், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS